## *DEPOSITION OF WITNESS*
## *(Chapter XXIII Code of Criminal Procedure)*

## *IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi*
## *CC.No.8/2025– P.W. 6 (LW -8 )*

| | |
|---|---|
| *Name* | திருமதி. சந்திரா (காவல் ஆய்வாளர்) |
| *Father/Husband's Name* | சேதுராமன் |
| *Village* | நன்னிலம் காவல் நிலையம் |
| *Taluk* | *நன்னிலம்* |
| *Religion* | |
| *Age* | 52 |

*எதிரி* **ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை .**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 11.03.2026*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் நன்னிலம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2024-ம் ஆண்டு பெருகவாழ்ந்தான் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றியபோது கடந்த 27.09.2024-ம் தேதியன்று எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் திரு. சீமான் என்பவர் நிலைய பொறுப்பிலிருந்தபோது, காளி மகன் பூமிநாதன் என்பவர் நிலையம் அஜராகி கொடுத்த வாய்மொழியான புகாரினை புகார்வாக்குமூலமாக பெற்றுக்கொண்டு, காவல் நிலைய குற்ற எண்.133/2024 BNS பிரிவுகள் 296(பி), 351(3) மற்றும் பிரிவு 25(1)(A) Arms Act ன் கீழ் எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார்.

2. பின்னர் இவ்வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 20.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் வீரக்குமார் மற்றும் அன்பழகன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வைமகசர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ( **மாதிரி**

**வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. சம்பவம் உண்மை என தெரிய வரவே எதிரியை தேடிவந்த நிலையில் எதிரி கர்ணாவூர் பிரிவு சாலை அருகே நின்றுக்கொண்டிருந்தவரை அன்றைதினமே 21.00 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்தேன். மேலும், எதிரியை கைது செய்தபோது, எதிரி அவரது கையில் வைத்திருந்த சுமார் 12 செ.மீ. அளவுடைய மரக்கைபிடி போட்ட 30 செ.மீ. அளவுடைய இரும்பலான அருவாள் அதன் மூக்கு வளைவு சுமார் 4 செ.மீ. அந்த தடயப்பொருட்களை என்னுடன் வந்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. தமிழ்ச்செல்வன் மற்றும் 2ம் நிலை காவலர் இருதயராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் எதிரியிடமிருந்து கைப்பற்றினேன். அதில் மேற்படி சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4. பின்னர் எதிரியை நீதிமன்ற அடைப்பு காவலுக்கு உட்படுத்தினேன். மேலும், எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடயப்பொருளை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து நீதிமன்ற வழக்கு சொத்து 106/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.**(படிவம் 91 அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது) கைப்பற்றப்பட்ட தடயப்பொருள் சா.பொ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் பட்டியல் சாட்சி 4, 5 ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

5. பின்னர் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு. சீமான் என்பவரை விசாரித்துள்ளேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது BNS பிரிவுகள் 296(பி), 351(3) மற்றும் பிரிவு 25(1)(A) Arms Act ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என கடந்த 11.10.2024-ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. சம்பவம் நடந்த பார்வையிட்டு தயார் செய்த மாதிரிவரைபடத்தில் அம்பிகாபதி பெட்டிக்கடை, எஸ்எம்டி பூக்கடை, குமார் மளிகை, உதயம் மளிகை, பைசல் மளிகை, சாந்தி ஸ்டுடியோ, கனி கோழிக்கடை என 10 கடைகள் உள்ளதுபோல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரிவரைபடத்தில் சொல்லியுள்ள சம்பவ இடமானது இந்த பகுதியில் தான் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக

சொல்லப்படும் நேரம் மாலை 5 மணி என்றால் சரிதான். பொதுவாக மாலை 5 மணியளவில் கடைதெருவில் பொதுமக்கள் நடமாட்டம் இருக்கும் என்றால்ச ரிதான். மாதிரிவரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடைகளிலுள்ள நபர்களை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால்ச ரியல்ல. நான் விசாரிக்க சென்ற சமயத்தில் அங்குள்ள கடைகள் மூடப்பட்டிருந்தது. மறுநாள் அங்குள்ள நபர்களை விசாரிக்க முயற்சித்தேனா என்றால் இல்லை.

2. பார்வைமகசரில் கையொப்பம் செய்த அன்பழகன் மற்றும் வீரக்குமார் இருவரும் சம்பவயிடத்திற்கு அருகிலுள்ள நபர்கள் இல்லை என்றால் சரிதான். மேற்படி நபர்கள் இருவரும் அ.சா.1 பூமிநாதனுக்கு வேண்டியப்பட்ட நபர்கள் என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் வைத்துதான் பார்வைமகசரில் கையொப்பம் பெற்றேன். சம்பவயிடத்தில் வைத்துதான் பார்வைமகசர் தயார் செய்யப்பட்டு கையொப்பம் பெறப்படவேண்டும் என்றால் சரிதான். அங்கு செல்லும்போது பிரின்டிங் மிஷன் கம்பியுட்டர் எடுத்து செல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் லேப்டாப் எடுத்து சென்று தான் பார்வைமகசர் தயார் செய்தேன்.

3. நான் பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடத்தை காவல் நிலையத்தில் வைத்துதான் தயார் செய்தேன் என்றால் சரிதான். அ.சா.1 பூமிநாதன் எனது விசாரைணையில் தன்னையும் ரமேஷ் என்பவரையும் எதிரி கொலை செய்துவிடுவதாக மிரட்டியதாகத்தான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ரமேஷ் என்பவர் அந்த பகுதியில் செல்வாக்கு மிக்க அரசியல் பிரமுகர் என்றாலும், அவரது தந்தை மற்றும் மைத்துனர் பராளுமன்ற உறுப்பினர்கள் என்றால் சரிதான். ரமேஷ் ஒரு அரசியல் கட்சியை சேர்ந்தவர் என்றால் சரிதான்.

4. விஸ்வநாதன் அரசியல் கட்சியை சேர்ந்தவர் இல்லை. ரமேஷ் என்பவருக்கும் விஸ்வநாதன் என்பவருக்கும் அரசியல் ரீதியான முன்விரோதம் இருந்து வருகிறது என்றால் எனது விசாரணையில் தெரியவில்லை. ரமேஷ் என்பவர் சித்தமல்லியிலிருந்து 150 கி.மீ. தூரத்திலுள்ள சிதம்பரம் என்ற ஊரில் நிரந்தரமாக குடியிருக்கிறார் என்றால் சரிதான். புகார்சமயத்திலும் சிதம்பரத்தில் தான் , இருந்தார் என்றால் சரிதான். பொதுவாக Arms Act வழக்கு பதிவு செய்யவேண்டும் என்றால் அந்த ஆயுதம் என்ன விதமாக பயன்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. 150 கி.மீ. தொலைவிலுள்ள ரமேஷ் மற்றும் பூமிநாதன் ஆகியோர்களை கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று சொன்னதால் தான் Arms Act பதிவு செய்யப்பட்டது என்றால்

சரிதான். பூமிநாதன் என்பவர் ரமேஷ் என்பவர் வீட்டில் வேலை பார்த்த நபர் என்றால் சரிதான். தற்போது வேலை பார்க்கவில்லை.

5. மாலை 5 மணிக்கு நடந்த சம்பவத்திற்கு 9 மணிக்கு தான் ஆயுதம் கைப்பற்றப்பட்டது என்றால் சரிதான். அ.சா.1 புகார் கொடுத்த பிறகு தான் சம்பவயிடம் சென்று ஆயுதத்தை கைப்பற்றினேன். மாண்பமை திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தின் Arms Act இந்த வழக்கிற்கு பொருந்தாது என்று திருப்பி அனுப்பப்பட்ட விவரம் தெரியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின்படி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், உண்மையில் அவ்வாறு சம்பவம் நடைபெற்றிருந்தால் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட நபர்களை சாட்சியாக விசாரித்திருப்பேன் என்றாலும் சரியல்ல. அரசியல் பிரமுகரின் அழுதத்தின் காரணமாகவும், எதிரியின் மீதுள்ள முன்விரோதத்தின் காரணமாக இந்த வழக்கை பதிவு செய்துள்ளோம் என்றாலும், அதற்கத்தான் அ.சா.1 க்கு வேண்டப்பட்ட நபர்களையே வரைபட சாட்சிகளாக விசாரித்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரி மீது தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

(ஒம்/-) ஆ.சீதாலெட்சுமி 11.03.2026

நீதித்துறை நடுவர் எண்.2,

மன்னார்குடி.